LI & FUNG

# சப்ளையர்
# நடத்தை நெறி

ஜனவரி 2020

இந்தத் தகவல்கள் Li & Fung-க்கு மட்டுமே உரித்தானது மற்றும் இரகசியமானது

Li & Fung-இன் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இருந்தாலன்றி இதனை வெளியிடுவது, பிரதி எடுப்பதோ அல்லது விநியோகம் செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது

# அறிமுகம்

பாதுகாப்பான பணியிடங்களை பராமரித்தல், அடிப்படை உரிமைகளை மதித்தல், சுற்றுச்சூழல் பின்னடைவை உருவாக்குதல், மற்றும் உயர் தர வர்த்தக வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிகளுடன் செயல்படுதல் ஆகியவை பற்றிய குறிப்பான தேவைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளை சப்ளையர்களுக்கு இந்த கையேடு வழங்குகிறது.

Li & Fung (LF) சப்ளையர் நடத்தை நெறிகள் ("சப்ளையர் நெறிகள்") மற்றும் அது தொடர்பான தரநிலைகள் மற்றும் வழிநடத்தல்கள் ஆகியவை உள்ளூர், தேசிய சட்டங்கள் / விதிமுறைகள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மையக் கருத்துக்கள், மற்றும் இதர பொருத்தமான சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.

வெவ்வேறு துறைகளில் உள்ள சப்ளையர்களின் ஊழியர்கள் பலதரப்பட்ட பணிகளைக் கொண்டிருந்தாலும், சப்ளையர் நெறிகளில் உள்ள தரநிலைகள் மற்றும் அது தொடர்பான வழிநடத்தல்கள் ஆகியவை ஒவ்வொரு பணியிடத்திலும் மற்றும் தங்குமிடத்திலும் உள்ள எல்லா பணியாளர்களுக்கும் பொருந்தும். உள்ளூர் சட்டங்கள் மற்றும் சப்ளையர் நெறிகள் ஆகியவற்றின் கீழ் உள்ள தங்களின் உரிமைகள் மற்றும் வழங்கல்கள் பற்றி எல்லா பணியாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். Li & Fung மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்காக தயாரிக்கப்படும் பாகங்கள் அல்லது பொருட்களை தயாரிக்கும் அடுத்த-நிலை சப்ளையர்களுக்கு LF தரநிலைகள் தெரிவிக்கப்பட்டு, அவை

மதிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள, சப்ளையர்களும் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும்.

LF பாதுகாப்பு தரநிலைகள், பயங்கரவாதத்திற்கு எதிரான சுங்க-வர்த்தக கூட்டாண்மை (C-TPAT), அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார ஆபரேட்டர்கள் (AEO) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த, LF தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் சப்ளையர்களுக்கு தேவையான அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகும்.

Li & Fung -இன் சொந்த விருப்பத்தின் பேரிலும், Li & Fung விரும்பும் எந்த நேரத்திலும், இந்த தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப சப்ளையர்கள் தணிக்கை செய்யப்படுவார்கள். தணிக்கைகளின் போது, தங்களது ஆலைகளை அணுகுவதற்கான முழு சுதந்திரத்தை சப்ளையர்கள் வழங்க வேண்டும். தணிக்கைகளின் போது, நாங்கள் பணியாளர்களுடனும் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடனும் பேசக்கூடும்.

சப்ளையர் நெறிகளில் கொடுக்கப்பட்டுள்ளபடி தேவைப்படும் தரநிலைகள் மற்றும் அது தொடர்பான வழிநடத்தல்களுக்கு இணங்க மறுத்தால், அதற்கான பல்வேறு விளைவுகள் பிரச்சனையின் தீவிரத்தை பொறுத்து அமையும். சகித்துக் கொள்ள முடியாத பிரச்சினைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும், இதன் விளைவாக Li & Fung மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு சப்ளையர்கள் பொருட்களை தயாரிப்பது நிரந்தரமாக நிறுத்தப்படலாம். மற்ற எல்லா பிரச்சினைகளுக்கும், எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் சப்ளையர்கள் அவற்றை சரிசெய்வதுடன், வருங்கால செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படும்.

அவ்வப்போது மதிப்பீடுகள் செய்தும் மற்றும் பயிற்சி அளித்தும், தேவையான தரநிலைகள் மற்றும் அது தொடர்பான வழிநடத்தல்களுக்கு அடுத்த-நிலை சப்ளையர்கள் இணங்கியிருப்பதை உறுதி செய்து கொள்வது சப்ளையர்கள் பொறுப்பாகும். மதிப்பீடுகள் மற்றும் பயிற்சி குறைந்தபட்சம் ஆண்டுக்கொரு முறை செய்யப்பட வேண்டும்.

# சப்ளையர்
# நடத்தை நெறிகள்

நமது நிறுவனத்திலும், விநியோகச் சங்கிலியிலும் பொறுப்பான வர்த்தகச் செயல்முறைகளை நிறுவ Li & Fung உறுதி பூண்டுள்ளது. **பாதுகாப்பான பணியிடங்கள் வழங்குதல்**, **அடிப்படை உரிமைகளை மதித்தல்**, **சுற்றுச்சூழல் பின்னடைவை இயக்குதல்** மற்றும் உயர்தரநிலை and operate with a high standard of **வர்த்தக வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறைகளை**செயல்படுத்துதல், ஆகியவற்றை வழங்க சப்ளையர்கல் தங்களது செயல்பாட்டை தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

Li & Fung சப்ளையர் நடத்தை நெறிகள் உள்ளூர், தேசிய சட்டங்கள் / விதிமுறைகள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மையக் கருத்துக்கள், மற்றும் இதர பொருத்தமான சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன சப்ளையர் நடத்தை நெறிகள், Li & Fung பொருட்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் அனைத்து பணியிடங்களுக்கும் மற்றும் தங்குமிடங்களுக்கும் பொருந்தும். அடுத்த-நிலை செயல்பாடுகள் உட்பட, தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வது கொள்வது சப்ளையர்களின் பொறுப்பு.

**Li & Fung தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீறும் அனைத்து நிகழ்வுகளிலும் சப்ளையர்கல் அதை சரிசெய்ய வேண்டும்.**



## பாதுகாப்பான பணியிடங்கள்

- தீப்பாதுகாப்பு மற்றும் அவசரகால முன்னெச்சரிக்கைகள் மற்றும் செயல்பாடுகளுக்கான பொறுப்பு
- முதல் உதவி மற்றும் தொழிரீதியான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளுக்கான பொறுப்பு
- சுத்தமான, சுகாதாரமான தங்குமிடம், குழந்தைப் பராமரிப்பு மற்றும் கேன்டீன் வசதிகள்
- ரசாயனங்கள் மற்றும் நச்சுப் பொருட்கள், பிரத்தியேக சாதனங்கள், மற்றும் இடப பாதுகாப்பு மேலாண்மைக்கான பொறுப்பு
- மின்சாரம், கட்டிட மற்றும் கட்டுமான அனுமதிகள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுக்கான பொறுப்பு



## அடிப்படை உரிமைகளை மதித்தல்

- அனைத்து வேலைகளும் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன
- அனைத்து தொழிலாளர்களும் குறைந்தபட்ச வயதுத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள் (15 அல்லது நாட்டில் சட்டப்பூர்வ வயது, எது அதிகமாக இருக்குமோ அது)
- அனைத்து தொழிலாளர்களையும் மரியாதையுடனும் சமமாகவும் நடத்துவதை உறுதிப்படுத்தவும்
- கூட்டு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமையை நிலைநிறுத்துங்கள்
- பணியமர்த்தல், ஊதியங்கள், சலுகைகள், வேலை நேரம் மற்றும் பணிநீக்க நடைமுறைகள் தொடர்பான பொறுப்பு
- குறை தீர்க்கும் வழிமுறைகள்



## சுற்றுச்சூழல் பின்னடைவு

- சுற்றுச்சூழல் மேலாண்மை முறையை அமைத்து செயல்படுத்தவும்
- இரசாயனங்கள், கழிவு நீர், காற்று உமிழ்வு, கழிவு மற்றும் ஒலி மாசுபாடு ஆகியவற்றின் தாக்கங்களைக் குறைக்கவும்
- ஆற்றல் மற்றும் வள செயல்திறனை மேம்படுத்தவும்



## வர்த்தக வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறைகள்

- சப்ளையர்கள் வெளிப்படையாக இருக்கிறார்கள் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தில் ஈடுபடுகிறார்கள்
- சப்ளையர்கள் ஒழுங்கான வர்த்தக நடைமுறைகளில் ஈடுபடுகிறார்கள்
- துணை ஒப்பந்தம் மற்றும் ஆய்வு ஏற்கனவே எழுதப்பட்ட ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்படுகின்றன
- வர்த்தக உரிமங்கள் சட்ட தேவைகளை பூர்த்தி செய்கின்றன அல்லது மீறுகின்றன